[2020 பிப்ரவரி 20

அனைத்து உபகரணங்களையும் வழங்குவதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனை மாநில நெஞ்சாலையில் அமைந்திருக்கின்ற காரணத்தால், ஏற்கெனவே இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். TAEI திட்டத்தின்கீழ் Accident Trauma Care Centre—விபத்துக் காய சிகிச்சை மையமாக அது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. விபத்துக் காய சிகிச்சை மையத்திற்குத் தேவையான வசதிகளை விரைவில் அரசு செய்து கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

63—

முந்திரி பதப்படுத்தும் தொழில் மையம்

17341—திருமதி ப. சத்யா:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி நகரில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் முந்திரி பதப்படுத்தும் தொழில் மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பண்ருட்டி நகர், விற்பனைக் குழு பண்ருட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் முந்திரி பதப்படுத்தும் தொழில் மையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின்

2020 பிப்ரவரி 20]

பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட பல்வேறு முந்திரி தொழிற்சாலைகள் மிகவும் சிரமமான சூழ்நிலையில் இருப்பதால், மூடப்படுகின்ற நிலைமையில் உள்ளன. 50 ஆண்டுகளுக்கும் மேலாக எனது தொகுதியில் முந்திரி தயார் செய்யும் தொழிலை பல நிறுவனங்கள் நடத்தி வருகின்றன. வெளிநாடுகளுக்கும் முந்திரியை ஏற்றுமதி செய்து வருகின்றன. அதிகளவிலான பெண்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கிய முந்திரி தொழிற்சாலைகளும் எனது தொகுதியில் இருக்கின்றன. தற்போது அந்தப் பெண்களுக்கு வேலை இல்லாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதை மேம்படுத்தும்விதமாக, சிறப்புத் திட்டத்தின் மூலமாக, அதாவது முந்திரி பதப்படுத்தும் மையமோ அல்லது பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய வகையிலோ அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மேலும், முந்திரி தொழிற்சாலைகளுக்கு பொருட்கள் கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. பொருட்களை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய ஒரு சூழ்நிலையும் இருக்கிறது. Machineries *அதிகளவில் பயன்படுத்தப்படுவதால் பெண்களுக்கு வேலை இல்லாமல் போய்விடுகிறது. இதுபோன்ற காரணங்களால் முந்திரி தொழிற்சாலைகள் மூடப்படக்கூடிய சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. தொழிற்சாலைகள் பழமையானதாகவும் இருக்கின்றன. வேளாண்மைத் துறை மூலமாக இவற்றை மேம்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், பெண்களுக்குண்டான வேலைவாய்ப்பை உறுதி செய்வதற்கு வேளாண்மைத் துறை மூலமாக ஆலோசனை செய்து, நிதி ஒதுக்கீடு செய்து முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி முடிவு எடுக்கும்பட்சத்தில், எனது தொகுதியிலுள்ள முந்திரி தொழிற்சாலைகள் காப்பாற்றப்படும். பெண்களுக்குண்டான வேலைவாய்ப்பும் உறுதி செய்யப்படும். பதப்படுத்தும் மையம் அமைப்பதற்கு தேவையான நிதியைச்*

செலவு செய்தது போக இதற்கென்று வேளாண்மைத் துறையில் நிதி இருக்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கேள்வியை முடியுங்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *வேளாண் உற்பத்தியை ஸ்திரப்படுத்துவதற்கு நிதி இருக்கிறது. அதைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய விளவங்கோடு தொகுதியில் முந்திரி பதப்படுத்தும் தொழில் மையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். தற்போது, கடலூர் மாவட்டம், பண்ருட்டியில்தான் முந்திரி அதிகளவில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கை தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் துறை அதிகாரிகளிடம் கலந்து பேசி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

64—

சார்–பதிவாளர் அலுவலகம் அமைப்பது குறித்து

***37748—திரு. ஏ.பி. நந்தகுமார்:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டில் சார்–பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?